©
தமிழ்நாடு அரசு
2019



**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**பேரவை முன்னர் வைக்கப்பட்ட ஏடுகள்**

---

பொருள் : 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்திக்கான முன்கணித்தல், திட்டமிடல் மற்றும் விலக்கத் தீர்வு மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகள்

**அறிவிக்கை எண்.தமிஒஆ/மு&தி காற்றாலை & சூரிய சக்தி / 21–1 நாள் 01 –03–2019**

[20 மார்ச் 2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் வெளியீடு (எண்.12) பாகம் VI–பிரிவு 2–ல் 40–63 ஆம் பக்கத்தில் அறிவிக்கை எண் VI(2)/32/2019 மற்றும் VI(2)/33/2019–ஆக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.]

**அறிவிக்கை**

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 181 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (zp) கூறு ஆகிய சட்டப் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் பின்வரும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது. இதன் வரைவு, மேற்சொன்ன 181 ஆம் சட்டப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறைவிதிகள்**

**1. சிறுதலைப்பு, தொடக்கம் மற்றும் அளாவுகை**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள் “2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான முன்கணித்தல், திட்டமிடல் மற்றும் விலக்கத் தீர்வு மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகள்” என்று வழங்கப்பெறும்.

(2) வணிக ஏற்பாடுகள் தொடர்பான வகைமுறைகள் மற்றும் விலக்கக்கட்டணங்கள் மற்றும் தண்டத்தொகை தொடர்பான வகைமுறைகள் தவிர இந்த ஒழுங்குமுறைவிதிகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்:

வரம்புரையாக வணிக ஏற்பாடுகள் தொடர்பான வகைமுறைகள் மற்றும் விலக்கக் கட்டணங்கள் மற்றும் தண்டத்தொகை தொடர்பான வகைமுறைகள் இந்த ஒழுங்குமுறைவிதிகளின் தொடக்க நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகளில் வேறு சூழ்நிலைத் தேவை ஏற்பட்டாலொழிய:

(a) "முழுமையான பிழை" (Absolute Error) என்பது ஒவ்வொரு காலத் தொகுதியிலும் காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் கிடைக்கக்கூடிய மின் திறனுக்கும் (AvC) அவர்களின் தொடர்புடைய திட்டமிட்ட மின் உற்பத்திக்கும் உட்செலுத்தப்பட்ட உள்ளபடியான உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடு என்று பொருள்படும் மற்றும் பின்வரும் சூத்திரத்தினை பயன்படுத்தி விழுக்காடு சொற்றொகுதியில் (percentage terms) கணக்கிடலாம்.

$$\text{முழுமையான பிழை (\%)} = 100 \times \frac{[\text{உள்ளபடியான மின் உற்பத்தி} - \text{திட்டமிடப்பட்ட மின் உற்பத்தி}]}{\text{கிடைக்கக் கூடிய மின்திறன்}}$$

(b) "சட்டம்" என்பது அவ்வப்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் (36/2003) என்று பொருள்படும்;

(c) "உள்ளபடியான மின் உள்ளிழுப்பு" என்பது ஒரு காலத் தொகுதியில் இடைமுக மின்னளவியில் அளவு செய்யப்பட்டுள்ளவாறு பெறுபவர் (Procurer) ஒருவரால் உள்ளிழுப்பு செய்யப்பட்ட மின்சாரம் என்று பொருள்படும்;

(d) "உள்ளபடியான மின் உட்செலுத்தல் / மின் உற்பத்தி" என்பது ஒரு காலத் தொகுதியில் இடைமுக மின்னளவியில் அளவு செய்யப்பட்டுள்ளவாறு ஒரு மின் உற்பத்தியாளரால் மின் உற்பத்தி செய்யப்பட்டு மின் கட்டமைப்பில் உட்செலுத்தப்பட்ட மின்சாரம் என்று பொருள்படும்;

(e) "கிடைக்கக்கூடிய மின்திறன்" (அல்லது "AvC") என்பது காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் ஒரு கொடுக்கப்பட்ட காலத் தொகுதியில் மின் உற்பத்தி செய்யக்கூடிய காற்றுச் சுழலிகள் (wind turbines), சூரிய மின்தேக்கிகள் (solar invertors) ஆகியவைகளின் மொத்த திறன் வரையளவு என்று பொருள்படும்;

(f) "மத்திய ஆணையம்" என்பது 2003 ஆம் ஆண்டு சட்டத்தின் 76 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட மத்திய மின்சார ஒழுங்குமுற்ற ஆணையம் என்று பொருள்படும்;

(g) "தொகுக்கப்பெற்ற மின் பரிமாற்றங்கள்" என்பதற்கு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டவாறு இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பிலுள்ளவாறான அதே பொருள் கொண்டதாக இருத்தல் வேண்டும்;

(h) “ஆணையம்” என்பது 2003 ஆம் ஆண்டு சட்டத்தின் 82 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும்;

(i) “பிரித்தல்” (“De-Pooling”) என்பது ஒரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தில் விலக்கங்கள் மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்களை மின் உற்பத்தியாளர்களுக்கிடையில் பிரித்து பகுத்துக் கொடுத்தல் என்று பொருள்படும்;

(j) “விலக்கம்” என்பது ஒரு காலத் தொகுதியின் உள்ளபடியான மின் உட்செலுத்தலுக்கும் மற்றும் திட்டமிட்ட மின் உற்பத்திக்கும் உள்ள வேறுபாடு ஆகும்;

(k) “முன்கணித்தல்” என்பது வானிலையியல் தரவுகள் (data) மற்றும் பிறதொடர்புடைய அளவுருக்களின் அறிவியல் சார்ந்த பகுப்பாய்வு அடிப்படையில் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் பெரும்பாலும் நிகழக்கூடிய மின் உற்பத்தியின் முன்கணித்தல் என்று பொருள்படும்;

(l) “சூதாட்டத்தில் ஈடுபடுதல் (Gaming)” என்பது இந்த ஒழுங்குமுறைவிதிகளைப் பொருத்தமட்டில் உள்நோக்கத்தோடு விலக்கங்களுக்கான கட்டணங்கள் மூலம் தகுதிக்கு மேம்பட்ட வணிக இலாபம் அடைவதற்காக ஒரு மின் உற்பத்தியாளர் கிடைக்கக்கூடிய மின் திறனளவை அல்லது திட்டமிட்ட மின் திறனளவை உள்நோக்கத்தோடு தவறுதலாக அறிவிப்பது என்று பொருள்படும் ;

(m) “மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு” என்பது சட்டத்தின் 86 ஆம் சட்டப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (h) கூறின்கீழ் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநில மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு என்று பொருள்படும்;

(n) “இந்திய மின்கட்டமைப்பு விதித்தொகுப்பு” (அல்லது “IEGC”) என்பது சட்டத்தின் 79 ஆம் சட்டப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (h) கூறின்கீழ் மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு என்று பொருள்படும்;

(o) “இடைமுக மின்னளவி” என்பது அவ்வப்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகளின் நிறுவல் மற்றும் இயக்குதல்) ஒழுங்குமுறைவிதிகளின்கீழ் மத்திய மின்சார அதிகார அமைப்பினால் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு இடைமுக மின்னளவிகள் என்று பொருள்படும்;

(p) “இடையிணைப்பு புள்ளி” என்பது மின்செலுத்தல் அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் அமைந்த ஒரு மின் உற்பத்தி

வசதியமைப்பின் (facility) இடைமுக புள்ளி என்று பொருள்படுவதோடு காற்றாலை அல்லது சூரிய சக்தி வசதியமைப்பைப் பொருத்தமட்டில் ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தின் தாழ்வழுத்த பக்கத்திலுள்ள உள்வரு (incoming) மின்னூட்டியின் மின்தொடர் தனிப்படுத்தி (line isolator) என்று பொருள்படும்;

(q) "ஒருங்கிணைந்த துணை மின்நிலையம்" என்பது பல்வேறு காற்றாலை அல்லது சூரிய சக்தி மின்னாக்கிகள் தாழ்வழுத்த பக்கத்தில் இணைந்துள்ள கூட்டு மின்மாற்றி (step-up transformer) மற்றும் இணையான இணைப்பமைப்பு (associated switchgear) அடங்கிய துணை மின்நிலையம் என்று பொருள்படும்;

வரம்புரையாக, ஒரு மின் பகிர்மான உரிமதாரரின் அல்லது மாநில மின்செலுத்தல் பணி நிறுவனத்தின் (Utility) துணை மின்நிலையத்தில் முடிவுக்கு வருகின்ற பொதுவான அல்லது தனியொரு மின்னூட்டியுடன் மின் உற்பத்தி அலகு இணைந்திருக்குமானால், அத்தகைய துணை மின்நிலையம் இந்த ஒழுங்குமுறைவிதிகளின் நோக்கங்களுக்காக அத்தகைய காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியாளரின் ஒருங்கிணைந்த துணை மின்நிலையமாக பாவிக்கப்படுதல் வேண்டும்;

(r) "பெறுபவர்" (Procurer) என்பது திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க முறைப்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட பரிமாற்றம் மூலமாக மின்சாரம் பெறும் ஒரு தனி நபர் மற்றும் மின் பகிர்மான உரிமதாரர், மின் வணிக உரிமதாரர் அல்லது ஒரு திறந்த நுழைவுரிமை நுகர்வோர் என்று பொருள்படும்;

(s) "தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை" (அல்லது "QCA") என்பது இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும் ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்துடன் இணைந்துள்ள காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களால் அல்லது ஒரு துணை மின்நிலையத்துடன் நேரடியாக இணைந்துள்ள ஒரு தனியொரு மின் உற்பத்தியாளரால் நியமனம் செய்யப்பட்ட முகமை என்று பொருள்படும்;

(t) "திட்டமிடப்பட்ட மின் உற்பத்தி" என்பது ஒரு காலத் தொகுதியின் அல்லது பிற கால அளவின் மெகாவாட் அளவில் அல்லது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் அனுப்பப்படும் மெகாவாட் மணி அளவிலான திட்டமிடப்பட்ட மின் உற்பத்தி என்று பொருள்படும்;

(u) "திட்டமிடப்பட்ட மின் உள்ளீடுப்பு" என்பது ஒரு காலத் தொகுதிக்கான அல்லது பிற கால அளவிற்கான மெகாவாட் அளவில் அல்லது மெகாவாட் மணி அளவில் மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் செய்யப்பட்ட மின்பகுப்பு என்று பொருள்படும்;

(v) "மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கு (காற்றாலை மற்றும் சூரிய சக்தி)" என்பது காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் விலக்கங்களுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களின் மாநிலக் கணக்கு என்று பொருள்படும்;

(w) "மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கு" (DSM) என்பது மின் விலைக்குவாங்குபவர்கள் மற்றும் மின் விற்பனையாளர்களின் விலக்கங்களுக்கான மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் பராமரிக்கப்படும் பெறுதல் மற்றும் செலுத்தல்களுக்கான மாநிலக் கணக்கு என்று பொருள்படும்;

(x) "மாநில உறுப்பமைவு" என்பது மாநில மின்சுமை பகுப்பு மையக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் மாநில அளவில் மின்னளவியிடல் மற்றும் எரிசக்தி கணக்கு வைத்திருக்கும் அத்தகைய தனிநபர் என்று பொருள்படும்;

(y) "மாநில மின்சுமை பகுப்பு மையம்" (அல்லது "SLDC") என்பது சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிறுவப்பட்டு மாநில மின் கட்டமைப்பு விதித்தொகுப்பின் வகைமுறைகளுக்கிணங்க மாநில உறுப்பமைவுகளின் திட்டமிடலை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பு வகிக்கும் தமிழ்நாட்டின் மின்சுமை பகுப்பு மையம் என்று பொருள்படும்;

(z) "காலத் தொகுதி" ("Time block") என்பது அதற்கென குறித்துரைக்கப்பட்ட மின் அளவுருக்கள் மற்றும் எண்ணிக்கைகள் மூலம் சிறப்பு எரிசக்தி மின்னளவியால் பதிவு செய்யப்படும் முதல் காலத் தொகுதி 00–00 மணி அல்லது ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பிறகால அளவில் தொடங்கும் மத்திய ஆணையம் மற்றும் மாநில ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படும் 15 நிமிடங்கள் அல்லது ஏதாவது அத்தகைய குறைந்த கால அளவு ஆகும்.

இந்த ஒழுங்குமுறைவிதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் இந்த ஒழுங்குமுறைவிதிகளில் பொருள்வரையறை செய்யப்படாவிட்டாலும், சட்டம் அல்லது விதிகள் அல்லது அவற்றின்கீழ் செய்யப்பட்ட பிற ஒழுங்குமுறைவிதிகளில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் A

## பொது

### 3. நோக்கம்

(1) மாநில மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு மற்றும் சட்டத்தில் கருதப்படுகிறவாறு முன்கணித்தல், திட்டமிடல் மற்றும் மின் உற்பத்தியாளர்களின் விலக்கத் தீர்வுக்கான அமைப்புமுறைமூலமாக மின் கட்டமைப்பின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பினை பேணுவதோடு தமிழ்நாட்டில் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியினை ஒருங்கிணைக்க வசதி செய்வதே இந்த ஒழுங்குமுறைவிதிகளின் நோக்கமாகும்.

(2) அமைப்புமுறையின் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை பராமரிப்பதற்காக காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி ஆகியவற்றின் வாரத்திற்கு முன்னதான, நாளுக்கு முன்னதான மற்றும் ஒரு நாளுக்குள்ளான இயக்கங்கள் மற்றும் திட்டமிடல் மற்றும் அதனுடைய திட்டமிடலுக்காக நீண்டகால முன்கணிப்புகளை மாநில மின்சுமை பகுப்பு மையம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(3) மின் கட்டமைப்பின் பாதுகாப்பிற்குட்பட்டு, முடிந்தவரையிலான அதிகப்படியான, காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கு உதவி செய்வதற்காக மாநில மின்சுமை பகுப்பு மையம் மரபு முறையான (conventional) மின் உற்பத்தி அலகுகளின் இணங்கு தன்மையையும் கட்டமைப்பிற்கிடையேயான இணை மின்தொடர்களின் திறனளவையும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

### 4. பொருந்துகை.

(1) தமிழ்நாட்டில் மாநிலத்திற்குள் மின்செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைந்துள்ள (கூரை மேலான சூரிய சக்தி மின் திட்டங்கள் தவிர) காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை சுய உபயோகத்திற்கு பயன்படுத்தும் அல்லது மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திற்கு வெளியில் விற்பனை செய்வதற்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த துணை மின்நிலையங்கள் வழியாக இணைந்துள்ளவை உள்ளடங்கலாக, அனைவருக்கும் இந்த ஒழுங்குமுறைவிதிகள் பொருந்துதல் வேண்டும்.

(2) தேவையெனக் கருதினால், முழுமையான பிழை, துல்லியமான அலைவரிசை (band) மற்றும் விலக்கக் கட்டணத்தினை வடிவமைத்தல் உள்ளடங்கலாக இந்த ஒழுங்குமுறைவிதிகளை இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரோ அல்லது அதற்கு முன்னரோ ஆணையம் மறு ஆய்வு செய்தல் வேண்டும்.

## பாகம் B

## தொழில்நுட்ப ஏற்பாடுகள்: முன்கணித்தல் மற்றும் திட்டமிடல் விதித்தொகுப்பு

**5. முன்கணித்தல் மற்றும் திட்டமிடல் விதித்தொகுப்பு**

(1) இந்த முன்கணித்தல் மற்றும் திட்டமிடல் விதித்தொகுப்பு மாநிலத்திற்குள்ளான மின்செலுத்தல் வலையமைப்பில் (மின்செலுத்தல் மற்றும் மின் பகிர்மான அமைப்புமுறை) இணைந்துள்ள காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் ஒரு நாளைக்கு முன்னதான திட்டமிடலின் முறையியல் மற்றும் அதனுடைய ஒன்றரை மணி நேர கால அளவு அடிப்படையிலான திருத்தியமைத்தல்கள் மற்றும் அத்தகைய திட்டமிடப்பட்ட அளவுகளிலிருந்து அவைகளின் விலக்கங்களின் நடத்தும் முறைகளைக் குறித்துரைக்கிறது. இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு காற்றாலை மற்றம் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் தாமாகவோ அல்லது தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகள் வாயிலாகவோ முன்கணித்தல் மற்றும் திட்டமிடல் விதித்தொகுப்பின் தேவைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திலுள்ள காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் ஒரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையினை (த.ஒ.மு) அமர்த்தல் வேண்டும்:

வரம்புரையாக இந்த ஒழுங்குமுறைவிதியின் 2 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (q) உள் ஒழுங்குமுறைவிதியில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறு ஒருங்கிணைந்த துணை மின்நிலையமாக அமர்த்தப்பட்ட ஒரு துணை மின்நிலையத்துடன் இணைந்துள்ள ஒரு தனியொரு மின் உற்பத்தியாளர் அதனுடைய தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையாக கடமையாற்ற விருப்பத்தேர்வு செய்யலாம் அல்லது ஒரு தனிப்பட்ட உறுப்பமைவினை அதனுடைய தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையாக அமர்த்தலாம்.

வரம்புரையாக 25 மெகாவாட்வரை மொத்த மின் திறனளவுள்ள ஒருங்கிணைந்த துணை மின் நிலையம் (நிலையங்களின்) காற்றாலை/சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் மிகவும் அருகாமையிலுள்ள ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தின் தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமையுடன் தங்களின் திட்டமிடல் முன்கணித்தலையும் சேர்த்து கொள்ளலாம்.

மேலும் வரம்புரையாக, இத்தகைய காற்றாலை/சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் இசைவினைப் பெறுதல் வேண்டும். இது தொடர்பான மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் முடிவு காற்றாலை/சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

(3) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மாநில உறுப்பமைப்பாக பாவித்து நடத்தப்படுதல் வேண்டும்.

(4) 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (22) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பெற்ற விரிவான நடைமுறையின்படி ஒவ்வொரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையும் மாநில மின்சுமை பகுப்பு மையத்துடன் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) ஒரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையின் நியமனம் எவ்வாறு இருப்பினும், இந்த ஒழுங்குமுறைவிதிகளின் தொடர்புடைய வகைமுறைகளுக்கு இணங்கியிருப்பதற்கான பொறுப்பு தொடர்புடைய மின் உற்பத்தியாளர்களிடம் இருத்தல் வேண்டும் மற்றும் அவர்களுக்கும் அவர்களின் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்குமிடையேயான வணிக மற்றும் பிற ஏற்பாடுகள் அவர்களுக்கிடையேயான உடன்படிக்கைகள் அல்லது அலுவல் விதிமுறைகளின்படி முறைப்படுத்துதல் வேண்டும்.

(6) பின்வருவனவை உட்பட ஆனால் அவற்றிற்கு வரம்பிடப்படாமல், இந்த ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மின் உற்பத்தியாளர்களால் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை நியமனம் செய்யப்படுதல் வேண்டும்:

(a) மின்பயனீட்டுக் கணக்கீடு மற்றும் தரவு சேகரித்தல் மற்றும் மின் பகிர்மான உரிமதாரர்கள், மின்சுமை பகுப்பு மையம் மற்றும் பிற முகமைகளுடன் அவற்றின் தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு;

(b) ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தின் அங்கமான மின் உற்பத்தியாளர்களுக்குள் விலக்கக் கட்டணங்களைப் பிரித்தல் மற்றும் செலுத்தல்கள் / பெறக்கூடியவைகளைத் தீர்வு செய்தல்.

(c) மின் உற்பத்தியாளர்களின் சார்பில் இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்கக் கட்டணங்களை மாநில மின்சுமை பகுப்பு மையத்துடன் தீர்வு செய்தல்.

(7) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் நோக்கங்களுக்காக மாநில மின்சுமை பகுப்பு மையம் மற்றும் அதனுடைய மின் உற்பத்தியாளர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு முகமையாக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை இருத்தல் வேண்டும்.

(8) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை, அது பிரதிநிதித்துவம் செய்யும் மின் உற்பத்தியாளர்களின் தொழில்நுட்ப விவரக் குறிப்பீடுகளை அது பதிவு செய்யும் காலத்தில் அல்லது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் அதனுடைய விரிவான நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய கால அளவில் மற்றும் இவ்விவரக் குறிப்பீடுகளில் மாறுதல் இருக்கும்போது குறிப்பிட்ட படிவத்தில் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(9) மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தேவைப்படும் உள்ளபடியான காலத்திற்கான மின் உற்பத்தி தொடர்பான அளவுருக்கள் மற்றும் வானிலை

தொடர்புடைய தரவுகளை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை அளித்தல் வேண்டும்.

(10) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையினால் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தகவல் பரிமாற்றம் செய்வதற்காக தொலைவுக்கணிப்பியல் (Telemetry) / தகவல் தொடர்பு மற்றும் தரவு கையகப்படுத்தும் அமைப்புமுறைகளுடன் / மின்னளவியிடலை முறைப்படுத்துவது தொடர்பான மத்திய மின்சார அதிகார அமைப்பு ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அவற்றின் மீதான திருத்தங்களுக்கிணங்க எரிசக்தி கணக்கிடுதலுக்காக மின்னளவிகள் நிறுவப்படுதல் வேண்டும்.

(11) மாநிலத்திற்குள் மின்செலுத்தல் அமைப்புமுறையுடன் இணைந்துள்ள மற்றும் நேர்வுக்கேற்ப மாநிலத்திற்குள் அல்லது மாநிலங்களுக்கிடையே மின் விற்பனை ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் மொத்த மின் கணிப்புகளை ஒவ்வொரு வகை மின் உற்பத்தி ஆதாரத்திற்கும் மற்றும் மாநிலத்திற்குள் / மாநிலங்களுக்கிடையேயான மின் பரிமாற்றங்களுக்கும் தனித்தனியாக குறிப்பிட்ட படிவங்களில் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(12) பாதுகாப்பான மின் கட்டமைப்பு இயக்கத்திற்கு தேவைப்படும் சமநிலையான வள ஆதாரங்களுக்காக சிறந்த முறையில் திட்டமிடுதலுக்காக தேவையெனில் முன்கணிக்கும் முகமைகளை அமர்த்தி மாநிலத்திற்குள்ளான மின்செலுத்தல் வலையமைப்பின் ஒவ்வொரு அமைவிடத்திலும் உட்செலுத்தவிருக்கும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி தொடர்பான முன்கணிப்பினையும் மாநில மின்சுமை பகுப்பு மையம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(13) ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்துடன் இணைந்துள்ள அனைத்து காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் மொத்த திட்டமிடல் அளவைத் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைத் தனித்தனியாகத் தொகுத்து அதனை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

(14) ஒரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையானது பன்மடங்கான (multiple) ஒருங்கிணைந்த துணை மின்நிலையங்களுக்கான முன்கணித்தல் மற்றும் திட்டமிடலை மேற்கொள்ள இயலும். எனினும், காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திற்கான திட்டமிடல், எரிசக்தி கணக்கு வைப்பு மற்றும் விலக்க கண்காணிப்பு தனித்தனியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(15) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கிணங்க மின் உற்பத்தியாளர்களின் சார்பில் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையினால் திட்டமிடப்படாத காற்றாலை அல்லது சூரிய சக்தி மின்

உற்பத்தியானது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் பகுப்பு செய்தலுக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(16) மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் முன்கணிப்பினை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை அதனுடைய அட்டவணைகளைத் தயார் செய்வதற்காக பின்பற்றலாம் அல்லது அதனுடைய முன்கணிப்பின் அடிப்படையில் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு ஒரு அட்டவணையை அளிக்கலாம். அந்த அட்டவணை விலக்கம் நிர்ணயம் மற்றும் தீர்வுக்கு மாதிரி அட்டவணையாக இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் முன்கணிப்பினை பின்பற்றுவதற்கு விருப்பத் தேர்வு செய்தால், அத்தகைய முன்கணித்தலில் ஏற்படும் பிழைகளின் பின்விளைவுகளினால் திட்டமிடலில் ஏற்படும் விலக்கங்களை தங்களுடைய தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை வழியாக தொடர்புடைய மின் உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(17) மாநில மின்சுமை பகுப்பு மையம் அதனுடைய முன்கணிப்பு சேவைகளை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கு வழங்குவதற்கு ஆணையத்தால் ஒப்புதலளிக்கப்படலாகும் அத்தகைய கட்டணங்களை வசூல் செய்தல் வேண்டும் மற்றும் அவ்வாறாக வசூல் செய்யப்பட்ட தொகையானது மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் கட்டணங்கள் மற்றும் செலவுகளை நிர்ணயம் செய்வதற்கான மொத்த வருவாய்த் தேவையில் ''பிற வருவாய்'' எனக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(18) மாநில மின் கட்டமைப்பில் கிடைக்கக்கூடிய மற்றும் தேவைக்குமேல் அதிகம் கிடைக்கக்கூடிய மின்திறனை மதிப்பீடு செய்வதற்காக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திற்கான ஒரு நாளுக்கு முன்னதாக மற்றும் ஒரு வாரத்திற்கு முன்னதாக உள்ள அட்டவணையினை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு அளித்தல் வேண்டும்.

(19) ஒரு நாளுக்கு முன்னதாக உள்ள அட்டவணையானது அடுத்த நாளின் 00–00 மணியிலிருந்து ஒவ்வொரு 15 நிமிட கால அளவிலிருந்து அந்த நாளின் அனைத்து 96 கால அளவிலுள்ள காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் மற்றும் ஒரு வாரத்திற்கு முன்னதான அட்டவணையானது அடுத்த ஏழு நாட்களுக்கான அதே தகவல்களை கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும்.

(20) (a) மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு முன்னறிவிப்பு வழங்கிவிட்டு மாநிலத்திற்குள் மின்செலுத்தல் வலையமைப்புடன் (தொகுக்கப் பெற்ற பரிமாற்றங்கள் நீங்கலாக) இணைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தியாளர்களின் அட்டவணையினை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை திருத்தியமைக்கலாம்.

(b) அத்தகைய திருத்தியமைப்புகள் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ள காலத் தொகுதிக்கு அடுத்து வரும் 4–வது காலத் தொகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(c) ஒரு குறிப்பிட்ட நாளில் பெருமமாக 16 திருத்தியமைத்தல்களுக்குட்பட்டு ஒரு குறிப்பிட்ட நாளில் 00–00 மணியிலிருந்து ஒவ்வொரு ஒன்றரை மணி நேர கால இடைவெளியிலும் ஒரு திருத்தியமைத்தல் இருக்கலாம்.

(21) மூன்று மாதத்திற்குள் மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் சமர்ப்பிக்கப்படும் விரிவான நடைமுறையில் தொலைவுகணிப்பியல் தரவுகளுக்கான திட்டம், முன்கணிப்பு பணிந்தனுப்புவதற்கான படிவங்கள் மற்றும் பிற முறையியல்கள் மற்றும் தேவைகள் குறிப்பிடப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் அதற்கு ஒப்புதலளிக்க ஆணையம் பெருமுயற்சி கொள்ள வேண்டும்.

வரம்புரையாக, நடைமுறையினை ஆணையத்தின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்புவதற்கு முன்னர் வரைவு நடைமுறையினை மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்து சம்பந்தப்பட்டவர்களின் கலந்தாய்வு மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(22) (21) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான நடைமுறையானது பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:

(a) மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளை பதிவுசெய்தல் மற்றும் பதிவை நீக்குதலுக்கான கட்டணங்கள் மற்றும் தண்டத்தொகைகள் செலுத்தல் உட்பட நடைமுறை மற்றும் தேவைகள்.

(b) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளிடமிருந்து மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தேவைப்படும் மற்றும் அவைகளுக்கு மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் அளிக்கப்படவேண்டிய தகவல், தரவுகள் மற்றும் படிவங்கள்.

(c) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கும் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்குமிடையே தகவல் மற்றும் தரவுகளை பரிமாற்றம் செய்வதற்கான தகவல் தொடர்பின் முறையியல் மற்றும் கடைபிடிக்கத்தக்க வரைவுடன்பாடு.

(d) இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின்படி மாநில எரிசக்தி கணக்குவைப்பு கட்டமைப்பின்கீழ் எடுத்துக்காட்டுடன் கூடிய மாதிரிகளுடன் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் பரிமாற்றங்களுடன் எரிசக்தி மற்றும் விலக்கத்திற்கான கணக்கு வைப்பதற்கான வழிகாட்டுதல்கள்.

(e) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகள் முன்கணித்தல் மற்றும் திட்டமிடல் விதித்தொகுப்புக்கு இணங்கியிருத்தலை கண்காணிப்பதற்கான அமைப்புமுறை.

(f) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளால் மாநில ஒருங்கிணைந்த தீர்வில் ஏற்படும் தவறுகை நிலைமைகள் மற்றும் அவைகளின் நடத்தும்முறை.

(23) முன்கணிப்புகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்டவற்றிலிருந்தான விலக்கங்களின் வணிகரீதியான செயல்விளைவுகளை அவர்களின் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகள்மூலம் மின் உற்பத்தியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(24) மாநில உறுப்பமைவுகள் தங்களின் சாதனங்களையும் மின்சுமைகளையும் இந்திய மின் கட்டமைப்பு விதிதொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு ஆகியவைகளின் வகைமுறைகளுக்கு ஒவ்வுதலான முறையில் இயக்குதல் வேண்டும்.

(25) சூதாட்டத்தில் ஈடுபடுதலுக்கான நடத்தும்முறை (Treatment to Gaming)

(a) தகுதிக்குமேம்பட்ட வணிக இலாபம், தான் அல்லது மின் உற்பத்தியாளர் அடைவதற்கு உள்நோக்கத்தோடு கிடைக்கக்கூடிய மின் திறனளவை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமையால் தவறாக அறிவித்தல் என்பது சூதாட்டத்தில் ஈடுபடுதல் என்று கருதப்படுதல் வேண்டும் மற்றும் அது இந்த ஒழுங்குமுறைவிதிகளை மீறியமைக்கு சமமாகும்.

(b) மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் சூதாட்டத்தில் ஈடுபடுதல் அடையாளம் காணப்பட்டபின்னர், கிடைக்கக்கூடிய திறனளவு சரியாக அறிவிக்கப்பட்டிருந்தால், விதிக்கப்படலாகும் விலக்கக் கட்டணங்களுக்கு மூன்று மடங்கு தண்டத்தொகை, தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை செலுத்துவதற்கு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

(c) தண்டத்தொகையானது தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் மாநில மின்சுமை பகுப்பு மையம் மூலமாக ஒருங்கிணைந்த விலக்கத் தீர்வு அமைப்பு முறைக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(d) விரிவான நடைமுறையில் வரையறுத்துள்ளபடி, உரிய அறிவிப்பு வழங்கிய பின்னர், தவறாக அறிவித்தல் நிகழ்வுகள் தொடருமெனில், மாநில மின்சுமை பகுப்பு மையம் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையின் பதிவினை ரத்து செய்யலாம்.

6. தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை நியமனம் செய்தலின் அடிப்படைக்

கொள்கைகள்.—

(1) ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்துடன் இணைந்துள்ள மின் உற்பத்தியாளர்கள் அவர்களுக்கிடையில் ஒருவரையோ அல்லது ஏதாவது பிற உறுப்பமைவினையோ ஒரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையாக நியமனம் செய்யலாம்.

(2) ஒரு ஒருங்கிணைந்த துணை மின் நிலையத்தின் மின் உற்பத்தியாளர்களின் மொத்த நிறுவுத் திறனை கருத்திற்கொண்டு அவர்களில் பெரும்பான்மையோரின் ஒப்புதலுடன் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை நியமனம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் பெரும்பான்மை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பின்னர், தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை இந்த ஒழுங்குமுறைவிதிகளில் ஒதுக்கப்பட்டுள்ள அனைத்து செயற்பணிகளையும் ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து மின் உற்பத்தியாளர்களுக்காகவும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை தங்கள் சார்பில் இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள அலுவற்செயற்பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் தொழில்நுட்பமாக மற்றும் நிதி நிலையில் தகுதி வாய்ந்ததாக உள்ளது என்பதை மின் உற்பத்தியாளர்கள் தாங்களே மனநிறைவு கொள்ளுதல் வேண்டும்.

(4) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையின் அலுவல் தொடர்பான விதிமுறைகள் பின்வரும் நோக்கங்கள் குறித்தான வகைமுறைகளை உள்ளடக்குதல் வேண்டும்:

(a) தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மற்றும் மின் உற்பத்தியாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்;

(b) மின்னளவியிடல், பட்டியலிடல் மற்றும் எரிசக்தி கணக்கு வைப்பு ஏற்பாடுகள்;

(c) பிரித்தலுக்கான அடிப்படைக் கொள்கைகள் உள்ளடங்கலாக விலக்கக் கட்டணங்களை மின் உற்பத்தியாளர்களிடமிருந்து வசூல் செய்வதற்கான முறையியல்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வு;

(d) செலுத்தலுக்கான பாதுகாப்பு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய வகைமுறைகள்;

(e) புறக்கணிப்பு நிகழ்வுகள் மற்றும் அவற்றிற்கான தணிப்பு நடவடிக்கை.

## பாகம் – C

## வணிக ஏற்பாடுகள்

**7. மாநிலத்திற்குள்ளான மின் பரிமாற்றங்களுக்கான விலக்கத் தீர்வு**

(1) மாநிலத்திற்குள் மின்செலுத்தல் வலையமைப்புடன் இணைந்துள்ள சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியாளர்களால் தமிழ்நாட்டிற்குள் விற்பனை செய்யும் மின்சாரத்திற்கான விலை அவர்களின் உள்ளபடியான மின் உற்பத்தி அடிப்படையில் பெறுபவரால் தீர்வு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் இந்த ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு விலக்கத் தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து மாறுபடும் ஒரு மின் உற்பத்தியாளர் இந்த ஒழுங்குமுறைவிதிகளின்கீழான வகைமுறைகளின்படி விலக்கக் கட்டணம் செலுத்த பொறுப்பாவார்.

(2) தமிழ்நாட்டிற்குள் மின் விற்பனை அல்லது தன் பயன் மின்நுகர்வினைப் பொருத்தமட்டில், ஒரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தில் காற்றாலை அல்லது சூரிய சக்தி மின் உற்பத்தியாளரின் உள்ளபடியான மின் உட்செலுத்தல் திட்டமிடப்பட்ட மின் உற்பத்தியிலிருந்து மாறுபடுமானால், மிகை அல்லது குறைவுக்கான விலக்கக் கட்டணமானது தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் பின்வரும் அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு மாநில மின்சுமை பகுப்பு மையம் மூலமாக மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை 1 : தமிழ்நாட்டிற்குள் விற்பனைக்காகவோ அல்லது தன்பயன் நுகர்வுக்காகவோ குறைவான அல்லது மிகுதியான மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணம்**

| வ. எண். | 15 நிமிட காலத் தொகுதியிலான முழுமையான பிழை விழுக்காடு அளவில் | மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் செலுத்த வேண்டிய விலக்கக் கட்டணம் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) |
|---|---|---|
| 1 | 10 விழுக்காட்டிற்கு குறைவான தாகவோ அல்லது சமமாகவோ இருத்தல் | ஒன்றுமில்லை |
| 2 | 10 விழுக்காட்டிற்கு மிகையாக ஆனால் 20 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருத்தல் | யூனிட் ஒன்றுக்கு ரூ.0.25 வீதம் |

| | | |
|---|---|---|
| 3 | 20 விழுக்காட்டிற்கு மிகையாக ஆனால் 30 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருத்தல் | 10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் குறைவு அல்லது மிஞ்சிய அளவுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.0.25 வீதம் + 20 விழுக்காடுக்கு அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலுமான மீதி எரிசக்திக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் |
| 4 | 30 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருத்தல் | 10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் குறைவு அல்லது மிஞ்சிய அளவுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.0.25 வீதம் + 20 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலும் குறைவு அல்லது விஞ்சிய அளவுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் + 30 விழுக்காட்டிற்கு அப்பால் மீதி எரிசக்திக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.00 வீதம் |

(3) மாநில மின்சுமை பகுப்பு மையம் மற்றும் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை ஒருங்கிணைந்த துணை மின்நிலையம், தனிப்பட்ட மின் உற்பத்தியாளர்களின் காலத் தொகுதி வாரியான திட்டமிடல்கள், உட்செலுத்தப்பட்ட உள்ளபடியான மின் உற்பத்தி மற்றும் விலக்கங்கள் குறித்தான பதிவுருக்கள் மற்றும் கணக்குகளை தனித்தனியாக பராமரித்தல் வேண்டும்.

(4) 14 ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை, ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தில் ஒவ்வொரு மின் உற்பத்தியாளரின் எரிசக்தி விலக்கங்கள் மற்றும் விலக்கக் கட்டணங்களை தனித்தனியாக பிரிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

(5) சம்பந்தப்பட்ட மின் உற்பத்தியாளர்கள் சார்பில் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மாநில மின்சுமை பகுப்பு மையத்துடன் விலக்கக் கட்டணங்களை தீர்வு செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு நிதியாண்டில் ஒரு காற்றாலை/சூரிய சக்தி மின் உற்பத்தியாளரின் விலக்கம் தொடர்பாக தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமை வழியாக மாநில விலக்க ஒருங்கிணைக் கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) ஒரு காற்றாலை/சூரிய சக்தி மின் உற்பத்தியாளரால் செலுத்தப்பட்ட மொத்த விலக்கக் கட்டணங்கள் தொடர்புடைய ஒருங்கிணைந்த துணை

மின்நிலையம் (நிலையங்களின்) மொத்த ஆண்டு மின் உற்பத்தியுடன் பெருக்கப்பட்டு உச்சவரம்பு வீதமான யூனிட் ஒன்றுக்கு 5 பைசா அல்லது தனி ஆணை மூலமாக ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய பிற வீதத்தில் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். நிதியாண்டில் கட்டுப்படுத்தப்பட்ட (capped) தொகையைவிட விலக்கக் கணக்கு விவர அறிக்கையின்படி மிகையாக செலுத்தப்பட்ட தொகை ஏதாவது இருப்பின், அது தொடர்புடைய தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமைக்கு திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது அதன் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் மற்றும் அத்தொகையானது நிதியாண்டின் இறுதியில் தொடர்புடைய தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமை வழியாக அடுத்துவரும் விலக்கத்தீர்வு காலம் (காலங்களில்) வட்டியின்றி மின் உற்பத்தியாளர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டும்.

**8. மாநிலங்களுக்கிடையேயான மின் பரிமாற்றங்களுக்கான விலக்கத் தீர்வு**

(1) மாநிலத்திற்குள் மின்செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைந்துள்ள காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டிற்கு வெளியில் விற்பனை செய்யும் மின்சாரத்திற்கான விலை அவர்களுடைய திட்டமிட்ட மின் உற்பத்தியின் அடிப்படையில் பெறுபவர்களால் (Procurers) தீர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தொடர்புடைய மின் உற்பத்தியாளர் ஒரு தனிப்பட்ட மின்னூட்டி வழியாக இணைந்திருந்தால் மட்டும் ஒரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தில் மாநிலங்களுக்கிடையேயான மின் பரிமாற்றங்கள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க மாநிலங்களுக்கிடையேயான மின் பரிமாற்றங்களில் நுழைய விரும்பும் மின் உற்பத்தியாளர், தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை வழியாக, அதனுடைய மின் உற்பத்திக்கான தனிப்பட்ட திட்டத்தினை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கும் தொடர்புடைய மண்டல மின்சுமை பகுப்பு மையத்திற்கும் (RLDC) பணிந்தனுப்புதல் வேண்டும்.

(4) உட்செலுத்தப்பட்ட எரிசக்தி அளவின் அடிப்படையில் அத்தகைய மின் உற்பத்தியாளருக்கான விலக்கத் தீர்வு கணக்கினை மாநில மின்சுமை பகுப்பு மையம் தயாரித்தல் வேண்டும்.

(5) மாநிலத்திற்குள்ளான மின்செலுத்தல் வலையமைப்புடன் இணைந்துள்ள மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியில் மின்சாரம் விற்பனை செய்யும் மின் உற்பத்தியாளர்களின் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள் இந்த ஒழுங்குமுறைவிதிகளின் பின் இணைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். இதற்கான கணக்கு வைப்பு மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் செய்யப்படுதல் வேண்டும்.

9. மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மாநிலத்திற்குள்ளான மின் பரிமாற்றங்கள்: பிற வகைமுறைகள்.—

(1) ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திலும் ஒவ்வொரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரத்திற்குமான அதாவது, காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மாநிலத்திற்குள்ளான மின் பரிமாற்றங்கள் தொடர்பான விலக்கங்கள் தனித்தனியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) மாநில மின்சுமை பகுப்பு மையம், காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி தொடர்பான மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மாநிலத்திற்குள்ளான மின் பரிமாற்றங்களுக்கான தனித்தனியான எரிசக்தி மற்றும் விலக்கக் கணக்குகளை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய முகமை தொடர்புடைய மின் உற்பத்தியாளர்களின் விலக்கக் கட்டணங்களை தீர்வு செய்தல் வேண்டும்.

## பாகம் D

## செயற்படுத்தல் ஏற்பாடுகள்

10. மின்னளவியிடல்

(1) மின்னளவியிடல் முறைப்படுத்தல் தொடர்பாக மத்திய மின்சார அதிகார அமைப்பு ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு, காலத் தொகுதிகளில் எரிசக்தி பதிவு செய்யக்கூடிய சிறப்பு எரிசக்தி மின்னளவி (SEM) ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திலும் இருத்தல் வேண்டும். இந்த மின்னளவிகள் தானியங்கி மின்னளவி அளவீடுகள் அமைப்புமுறையிலிருந்து கட்டளை அறிவுரை (command instruction) மூலமாக கால அளவு ஒத்தியக்கல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குமுறைவிதிகளின்கீழ், எரிசக்தி கணக்கிடும் நோக்கத்திற்காக, மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் விவரங்கள் பெறுதல் மையத்திற்கு (SCADA) வழங்கப்படும் தரவுகளுடன் (data), முந்திய வாரத்தின் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்த ஏழு நாட்களுக்கான வாராந்தர மின்னளவி பதிவுகளை வியாழக் கிழமை 00.00 மணிக்குள் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை, மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

11. **மாநில மின்சுமை பகுப்பு மையத்துடன் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையின் தகவல் தொடர்பு.—**

(1) மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் குறிப்பிடப்பெற்ற விரிவான நடைமுறை பின்வரும் நோக்கங்களுக்காக மட்டும் வரம்பிடப்படாமல், அவைகள் உட்பட,

தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையம் ஆகியவைகளுக்கிடையே கடைப்பிடிக்கத்தக்க மரியாதைமுறை மற்றும் தகவல் பரிமாற்றங்கள் குறித்தும் விவரிக்க வேண்டும்:

(a) ஒரு நாளைக்கு முன்னரான, ஒரு வாரத்திற்கு முன்னரான மற்றும் நாளுக்கான திட்டமிடல் மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கான ஏதாவது திருத்தியமைத்தல்கள் தொடர்பான தகவல் தொடர்பு.

(b) ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்தில் காலத் தொகுதி நேரம் வாரியான கிடைப்புத் திறன் மற்றும் உள்ளபடியான மின் உற்பத்தி தரவு தொடர்பான தகவல் தொடர்பு.

(c) மாநில மின்சுமை பகுப்பு மையத்திடமிருந்து தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கான மின் கட்டமைப்பு கட்டுப்பாடுகள் மற்றும் குறைக்கப்பட்ட நிலை தொடர்பான தகவல் தொடர்பு.

(2) மாநில மின்சுமை பகுப்பு மையம் தனக்கும் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்குமிடையேயானத் தகவல் தொடர்புக்காக தேவையான தகவல் தொழில் நுட்பவியலை சாத்தியமாக்கும் தகவல் தொடர்பு மேடை மற்றும் தகவல் தொடர்புக்கான மென்பொருள் ஆகியவைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மாநில மின்சுமை பகுப்பு மையம் அனைத்து திட்டமிடல்கள் மற்றும் விலக்கங்களுக்கான நடப்பிலுள்ள தரவுகளை அடைவதற்கும் மற்றும் சரியான நேரத்தில் பட்டியலிடல் மற்றும் விலக்கக் கட்டணங்களை கொடுப்பதற்கும் வசதி செய்யும் பொருட்டு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான தகவல் தொடர்பு மென்பொருள் உள்நுழை விவரங்களை அளித்தல் வேண்டும். மின் உற்பத்தியாளர்களின் இடைமுக மின்னளவி தரவுகளை மாறுதல் செய்வதற்கும் பகுப்பாய்வு மற்றும் செயல்முறைக்குள்ளாக்குவதற்கும் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை தானியங்கி மின்னளவி பதிவு வசதிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

(4) பின்வருவன உட்பட, ஆனால் அவற்றிற்கு வரம்பிடப்படாமல், தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான தகவல் தொடர்பு மேடை மற்றும் மென்பொருள் மாநில மின்சுமை பகுப்பு மையம் மற்றும் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை ஆகியவைகளுக்கிடையேயான தகவல் பரிமாற்றத்திற்கு ஏதுவாக இருத்தல் வேண்டும்:

i. மின் உற்பத்தியாளர் மின் தடங்கல்கள் மற்றும் அவற்றிற்கான காரணங்கள் ;

ii. தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் செலுத்தப்படவேண்டிய / பெறப்பட வேண்டிய விலக்கக் கட்டணங்கள் ;

iii. தள(site) இயல்புகள் மற்றும் காற்றுச் சுழலிகள், சூரிய மின்தேக்கிகள் முதலியனவற்றின் விவரங்கள்.

iv. தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் கையாளப்பட்டுள்ள திட்டமிடல்கள் மற்றும் மின் உற்பத்தி.

**12. விலக்கக் கணக்கு வைப்பு**

(1) மாநிலத்திற்கான விலக்கத் தீர்வு முறையியல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

(a) மாநில மின்சுமை பகுப்பு மையம் முழுமையான பிழையினை கணக்கிடுதல் வேண்டும். அதாவது, ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையம் தொடர்பான திட்டமிடப்பட்ட மின் உற்பத்திக்கும் மற்றும் உள்ளபடியாக உட்செலுத்தப்பட்ட மின்திறனின் வேறுபாடு மற்றும் 7 ஆம் மற்றும் 8 ஆம் ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க விலக்கக் கட்டணத்திற்காக அவ்வாறாக செலுத்தப்படவேண்டிய / பெறப்படவேண்டிய தொகைகளை தீர்மானித்தல் வேண்டும்.

(b) மாநிலத்திற்கு மொத்தமாக மாநில புற எல்லையில் செலுத்தவேண்டிய அல்லது பெறவேண்டிய விலக்கக் கட்டணங்கள் மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(c) காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியின் விலக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் மாநில புற எல்லையில் விலக்கக் கட்டணத்தில் அதனுடைய பங்களிப்பு ஆகியவற்றினை மாநில மின்சுமை பகுப்பு மையம் கணக்கிடுதல் வேண்டும் மற்றும் அவற்றிற்கான மாநில விலக்க ஒருங்கிணை கணக்கினை (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) தனித்தனியாக பராமரிக்க வேண்டும்.

(2) விலக்கக் கட்டணங்களை தீர்வு செய்தல்

(a) மாநில மின்சுமை பகுப்பு மையம் திட்டமிடலிருந்தான விலக்கங்களை கணக்கிட்டு செலுத்தவேண்டிய/ பெற வேண்டிய விலக்கக் கட்டணங்களைத் தீர்மானித்து அவ்வாறாக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கு பட்டியல் எழுப்ப வேண்டும்.

(3) மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) வசூலிக்கப்பட்ட தொகைகள் மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் ஏற்படும் குறைவுத் தொகைகளை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**13. விலக்கத் தீர்வுக்கான செலுத்துதல் அமைப்புமுறை மற்றும் செலுத்துதலில் பாதுகாப்பு.—**

(1) ஒவ்வொரு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையும் ஒருங்கிணைந்த

துணை மின்நிலையத்திற்கான மொத்த விலக்கக் கட்டணத் தொகையினை மாநில மின்சுமை பகுப்பு மையத்திடம் செலுத்துதல் வேண்டும் மற்றும் அத்தொகையினை உள்ளபடியான மின் உற்பத்தியின் வீதப்படி சம்பந்தப்பட்ட மின் உற்பத்தியாளரிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

வரம்புரையாக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு விலக்கக் கட்டணங்கள் கொடுக்கப்படுவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட மின் உற்பத்தியாளர்களைச் சாரும்.

(2) மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் கணக்குகள் மற்றும் பட்டியல் வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள் விலக்கக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் செலுத்துவதில் 2 நாட்களுக்கு மேலாக தாமதமானால், அதாவது, பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 12 நாட்களுக்கு அப்பால், தாமதமான ஒவ்வொரு நாளுக்கும் 0.06 விழுக்காடு வீதத்தில் தனிவட்டி விதிக்கப்படுதல் வேண்டும். இந்த நடவடிக்கையானது சட்டத்தின் 142 ஆம் பிரிவின்படி எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு சட்டத்தின் 56 ஆம் பிரிவின்படியும் மற்றும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறைவிதிகளின்கீழும் எடுக்கப்படும் ஏதாவது நடவடிக்கையையும் உள்ளடக்கும்.

(3) காற்றாலை / சூரிய சக்தி மின் உற்பத்தியாளர் / தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மூன்று மாத கால மாதாந்தர சராசரி மின் உற்பத்தி செலவு விழுக்காடு வீதத்தில் முன்னுரிமைக்குரிய கட்டணம் (Feed in tariff) மாற்றவியலாத கடனுறுதிக் கடிதம் (Irrecovable Letter of Credit) மூலமாக மாநில மின்சுமை பகுப்பு மையம் பெயரில் செலுத்தி பாதுகாப்பு அளித்தல் வேண்டும். முன்னுரிமைக்குரிய கட்டணம் இல்லாமலிருக்கும் நேர்வில் மாநிலத்தில் ஏலம் கேட்டலில் கண்டறியப்பட்டவாறு நடைமுறையிலிருக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மின் கட்டணவீதம் மற்றும் ஆண்டிற்கான ஏலம் கேட்டல் மின் கட்டணவீதம் இல்லாமலிருந்தால் முன்னுரிமைக்குரிய மின் கட்டணவீதத்திற்குப் பதிலாக மாநிலத்தில் கடைசியாக நடத்தப்பட்ட ஏலம் கேட்டலில் கிடைக்கப்பெற்ற மின் கட்டணவீதம் எடுத்துக் கொள்ளப்படலாம். 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் 22 ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின்படி மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் வடிவமைக்கப்படவுள்ள விரிவான நடைமுறையில் செலுத்த வேண்டிய செலுத்தல் பாதுகாப்பு விவரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(4) விலக்கக் கட்டணங்களை செலுத்துவதில் ஏற்படும் தாமதத்திற்கு 13 ஆம் ஒழுங்குமுறைவிதியின் 2 ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வட்டி விதிப்பது எப்படி இருந்தபோதிலும், விலக்கக் கட்டணங்களை மாநில ஒருங்கிணை கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) செலுத்துவதில் தவறுகை இருக்கும் நேர்வில் தவறுகையின்

அளவிற்கு சம்பந்தப்பட்ட உறுப்பமைவின் கடனுறுதிக் கடிதத்தினை பணமாக மாற்றுவதற்கான உரிமை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு இருத்தல் வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட உறுப்பமைவு கடனுறுதிக் கடிதத்திற்கான தொகையினை மூன்று தினங்களுக்குள் இழப்பீடு செய்தல் (recoup) வேண்டும்.

(5) விலக்கங்களுக்கான கட்டணங்கள் பெறத் தகுதியுடைய தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளின் மின் உற்பத்தியாளர்களின் அனைத்து செலுத்தல்களும் மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) செலுத்தல்கள் பெறப்பட்ட 2 வேலை நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக —

i. விலக்கக் கட்டணங்களுக்கான பட்டியல் வெளியிடப்பட்ட 12 நாட்களுக்கப்பால் விலக்கக் கட்டணங்கள் மற்றும் அதன் மீதான வட்டி, ஏதாவது இருப்பின், அவைகளை செலுத்தத் தவறும் நேர்வில் விலக்கங்களுக்கான செலுத்தல்கள் அல்லது அவற்றின் மீதான வட்டி பெறப்படவேண்டிய தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளுக்கு / மின் உற்பத்தியாளர்களுக்கு மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) இருப்பிலுள்ள மீதித் தொகையிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும். இருப்பிலுள்ள மீதித்தொகை தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைகளுக்கு வழங்குவதற்கு போதுமானதாக இல்லாத நேர்வில் இருப்பிலுள்ள மீதித் தொகை சரி சமவீத அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும்.

ii. நிலுவைத்தொகைவழங்கப்படவேண்டியதகுதியானஒருங்கிணைக்கும் முகமைகளுக்கு / மின் உற்பத்தியாளர்களுக்கு மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கிலிருந்து (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வழங்கப்பட்டிருந்தாலும் தாமதமான செலுத்தல்களுக்கான வட்டி செலுத்தாமலிருக்கும் வரையில் மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) தாமதமான செலுத்தல்களுக்கான வட்டி செலுத்தும் பொறுப்பு இருந்து வருதல் வேண்டும்.

**14. விலக்கக் கட்டணங்களை பிரித்தல் (De-pooling of Deviation charges)**

மின் உற்பத்தியாளர்களின் உள்ளபடியான மின் உற்பத்தியின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மின் உற்பத்தியாளருக்கும் எதிராக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை விலக்கக் கட்டணங்களைப் பிரித்தல் வேண்டும்.

**15. குறைத்தலுக்கான தகவல் அளித்தல் (Intimation of Curtailment).—**

(1) நெருக்கடியான சூழ்நிலைகளில் நம்பகமான மற்றும் பாதுகாப்பான மின் கட்டமைப்பு இயக்கத்திற்காக மின் உட்செலுத்தல் தொடர்பாக ஏதாவது

குறைத்தல் இருந்தால் அதனை மாநில மின்சுமை பகுப்பு மையம் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த செய்தித் தொடர்பு மூலமாக தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கு தெரிவித்தல் வேண்டும் மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையம் அவ்வாறாக செய்யத் தவறினால் அதன் தொடர்ச்சியான விலக்கங்கள் ஏதாவது இருப்பின் அவற்றிற்கான விலக்கக் கட்டணங்கள் செலுத்த வேண்டியதில்லை.

(2) ஒரு நாளின் சில காலத் தொகுதிகளில் மின்தொடர் பராமரிப்பாலோ அல்லது பிற காரணங்களினாலோ ஏதாவது குறைத்தல் திட்டமிடப்பட்டு மாநில மின்சுமை பகுப்பு மையத்தினால் தெரிவிக்கப்பட்டால் தகுதி வாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமை மின் உற்பத்தி செய்யும் இடத்தில் மின் உற்பத்தியை குறைப்பதோடு அவ்வாறாக மின் திட்டமிடலையும் மாற்றியமைப்பதற்கு பொறுப்பாக வேண்டும். தவறினால் தேவைக்கேற்ப மின் திட்டமிடலை மாநில மின்சுமை பகுப்பு மையம் மாற்றியமைத்தல் வேண்டும்.

**16. எரிசக்தி கணக்கு வைப்பு.—**

(1) 10 ஆம் ஒழுங்குமுறைவிதியின் 1 ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு எரிசக்தி மின்னளவியின் பதிவுகளின் அடிப்படையில் எரிசக்தி கணக்கு வைப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநில மின்சுமை பகுப்பு மையத்திடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த மின் நிலையத்திற்குள்ளான விலக்கங்கள் தொடர்பான அனைத்து கணக்குகளும் வாராந்தர அடிப்படையில் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் தயார் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அவை தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அமைப்புமுறை மற்றும் மென்பொருள் வழியாக மாநில மின்சுமை பகுப்பு மையத்தினால் அணுகத்தக்க வகையில் இருக்க வேண்டும்.

(3) முந்திய ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்த ஏழு நாட்கள் கால அளவிற்கான செயல்முறைக்குள்ளாக்கப்பட்ட தரவுகளை (processed data) வாராந்தர அடிப்படையில் வியாழக் கிழமை நள்ளிரவுக்குள் சம்பந்தப்பட்ட தகுதியான ஒருங்கிணைக்கும் முகமைக்கு குறிப்பிட்ட படிவத்தில் ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்திலிருந்து வாராந்தர எரிசக்தி கணக்கு தயார் செய்வதற்காக மாநில மின்சுமை பகுப்பு மையம் அனுப்புதல் வேண்டும்.

(4) பதினைந்து நாட்களுக்குள் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் முரண்பாடுகள் ஏதாவது தெரிவிக்கப்பட்டால், சரிபார்ப்புக்குப் பின்னர் மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் உடனடியாக திருத்தம் செய்யப்படவேண்டும்.

(5) காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் மற்றும் மின்சாரம் பெறுபவர்களின் ஒவ்வொரு காலத் தொகுதிக்கான எரிசக்தி கணக்கு வைப்பு பட்டியலை மாநில மின்சுமை பகுப்பு மையம் மாதாந்தர அடிப்படையில் பட்டியலிடலுக்காக தயார் செய்தல் வேண்டும் மற்றும் அந்த தரவுகளை மின் பகிர்மான உரிமதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மின் பகிர்மான

உரிமதாரரின் பட்டியலிடல் மையம் மின்சாரம் பெறுபவர்களுடனான எரிசக்தி கணக்கு வைப்பு, பட்டியல்களை எழுப்புதல் மற்றும் தீர்வு செய்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பேற்க வேண்டும்.

(6) 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் 22 ஆம் உள் ஒழுங்குமுறைவிதிக்கிணங்க சம்பந்தப்பட்டவர்களின் கலந்தாய்வு மேற்கொண்டு எரிசக்தி கணக்கு வைப்பு தொடர்பான ஒரு விரிவான நடைமுறையினை மாநில மின்சுமை பகுப்பு மையம் தயார் செய்தல் வேண்டும் மற்றும் அதனை ஆணையத்தின் ஒப்புதலுக்காக பணிந்தனுப்பவேண்டும்.

## பாகம் – E

## பலவகை

### 17. திருத்தம் மேற்கொள்வதற்கான அதிகாரம்

ஆணையம் இந்த ஒழுங்குமுறைவிதிகளின் ஏதாவது வகைமுறைகளை, எந்த நேரத்திலும் மாற்றவோ, மாற்றியமைக்கவோ அல்லது திருத்தமோ மேற்கொள்ளலாம்.

### 18. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

இந்த ஒழுங்குமுறைவிதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது இடையூறுகள் எழுமானால், இடையூறுகளை நீக்குவதற்கு தேவைப்படுவதாக கருதப்படும், சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்பாடற்ற பொதுவான அல்லது குறிப்பிட்ட ஆணை வாயிலாக அத்தகைய வகைமுறைகளை ஆணையம் செய்யலாம்.

### 19. தளர்த்துவதற்கான அதிகாரம்

எழுத்து மூலமாக பதிவு செய்யப்படும் காரணங்களுக்காகவும் மற்றும் தளர்த்துதல் வழங்குவதால் பாதிக்கப்படலாகும் தரப்பினர்களுக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பு நல்கிய பின்னர் ஆணையம் தானாகவோ அல்லது அக்கறையுள்ள ஒரு நபரால் அதன் முன்னர் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலோ இந்த ஒழுங்குமுறைவிதிகளின் ஏதாவது வகைமுறைகளை பொதுவான தனிச் சிறப்பாணை மூலமாக தளர்த்தி உத்தரவிடலாம்.

### 20. நெறியுறுத்துதல்களை வெளியிடுவதற்கான அதிகாரம்

2003 ஆம் ஆண்டு சட்டம் மற்றும் இந்த ஒழுங்குமுறைவிதி ஆகியவைகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஒழுங்குமுறைவிதியினை செயற்படுத்துவதற்கும், பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் மற்றும் இந்த ஒழுங்குமுறைவிதியின்படி ஆணைகள் மற்றும் நெறியுறுத்துதல்களைப் பிறப்பிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு பொருட்கூறுகள் குறித்தும், இந்த ஒழுங்குமுறைவிதியின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுவதாக கருதப்படும் ஆணைகள் மற்றும் நெறியுறுத்துதல்களை ஆணையம் அவ்வப்போது பிறப்பிக்கலாம்.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

### பின் இணைப்பு

மாநிலத்திற்குள் மின்செலுத்தல் வலையமைப்பில் இணைந்துள்ள மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியில் மின்சாரம் விற்பனை செய்யும் அல்லது நுகரும் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியாளர்களின் குறைவான அல்லது மிகையான மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்களுக்கான கட்டமைப்பு

1. மாநிலத்திற்குள் மின்செலுத்தல் வலையமைப்பில் இணைந்துள்ள மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியில் மின்சாரம் விற்பனை செய்யும் அல்லது நுகரும் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கான விலக்கக் கட்டணங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

   a) திட்டமிட்ட மின் உற்பத்தியைவிட மின் உற்பத்தி குறைவானதாக இருந்தால், குறைவுக்கான விலக்கக் கட்டணங்கள் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கிற்கு பின்வரும் அட்டவணை A இல் கொடுக்கப்பட்டுள்ளது போன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை A : குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள்**

| *வ. எண்.* | *15 நிமிட காலத் தொகுதியில் முழுமையான பிழையின் விழுக்காடு* | *மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கில் செலுத்தப்படவேண்டிய விலக்கக் கட்டணங்கள் (காற்றாலை மற்றும் சூரிய சக்தி)* |
|---|---|---|
| 1 | 10 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் உச்ச எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். |
| 2 | 10 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆனால் 20 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் உச்ச எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். +10 விழுக்காட்டிற்கு |

| | | |
|---|---|---|
| | | அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மின்சக்தி உச்ச வரம்பு விலையில் 110 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். |
| 3 | 20 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆனால் 30 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் எரிசக்தி உச்ச வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். +10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் எரிசக்தி உச்சவரம்பு விலையில் 110 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும் +20 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் எரிசக்தி உச்ச வரம்பு விலையில் 120 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 4 | 30 விழுக்காட்டிற்கு அதிகமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் எரிசக்தி உச்ச வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும் +10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் எரிசக்தி உச்சவரம்பு விலையில் 110 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். +20 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் எரிசக்தி உச்ச வரம்பு விலையில் 120 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும் +30 விழுக்காட்டிற்கு அப்பால் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் எரிசக்தி உச்சவரம்பு விலையில் 130 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொ–குதியின் விலக்கக் கட்டணம் இதில் எது அதிகமோ அதுவாக இருத்தல் வேண்டும். |

b) உள்ளபடியான மின் உற்பத்தி, திட்டமிட்ட மின் உற்பத்தியைவிட அதிகமாக இருக்குமானால், மிகுதியான மின் உற்பத்திக்கான விலக்கக் கட்டணங்கள் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமையால் மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கிலிருந்து (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) அட்டவணை B இல் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு பெறப்படுதல் வேண்டும்.

## அட்டவணை B: மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள்

| வ. எண். | 15 நிமிட காலத் தொகுதியில் முழுமையான பிழையின் விழுக்காடு | மாநில ஒருங்கிணை விலக்கக் கணக்கிலிருந்து (காற்றாலை மற்றும் சூரிய சக்தி) பெறப்பட வேண்டிய விலக்கக் கட்டணங்கள் |
|---|---|---|
| 1 | 10 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். |
| 2 | 10 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆனால் 20 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும்.+10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 90 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். |
| 3 | 20 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆனால் 30 விழுக்காட்டிற்கு குறைவாக அல்லது சமமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவிற்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். +10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 90 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும் + 20 விழுக்காட்டிற்கு |

| | | |
|---|---|---|
| | | அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 80 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். |
| 4 | 30 விழுக்காட்டிற்கு அதிகமாக இருக்கும்போது | முழுமையான பிழை 10 விழுக்காடு வரையிலும் எரிசக்தி குறைவுக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலை அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். +10 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 20 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 90 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். + 20 விழுக்காட்டிற்கு அப்பால் மற்றும் 30 விழுக்காடு வரையிலும் மீதமுள்ள எரிசக்திக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 80 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும் +30 விழுக்காட்டிற்கு அப்பால் மீதமுள்ள எரிசக்தி குறைவுக்கு அந்த நாளின் மிகக் குறைந்த எரிசக்தி வரம்பு விலையில் 70 விழுக்காடு அல்லது அலைவெண்ணுடன் இணைந்த ஒத்திசைவான காலத் தொகுதியின் விலக்கக் கட்டணம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும். |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சு. சின்னராஜலு**
*செயலாளர்*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்*

**விளக்கவுரை**

தமிழ்நாட்டில் காற்றாலை மற்றும் சூரிய சக்தியில் அதிக அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்னூட்ட அளவு உள்ளது. காற்றாலை மின்சக்தியின் நிறுவுத்திறன் 8311 மெகாவாட் ஆகும் மற்றும் சூரிய சக்தியின் நிறுவுத்திறன் 2365 மெகாவாட் ஆகும். மேற்சொன்ன எரிசக்தியினை வெளியேற்றும்போது, மின்கட்டமைப்பின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பினை பராமரிப்பதற்காக அதிக அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனுக்கு ஏற்ற இடவசதி கொடுப்பதற்கும் மற்றும் பிந்தியகால திறன் அதிகரித்தல்கள் மற்றும் மின்கட்டமைப்பின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பினை நிருவகிப்பதற்கும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையங்களுக்கான முன்கணித்தல் மற்றும் திட்டமிடலுக்கான கட்டமைப்பு தேவையெனக் கருதப்படுகிறது.

2. காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்உற்பத்தியாளர்கள் ஒரு ஒருங்கிணைந்த துணை மின்நிலையத்துடன் இணைந்துள்ள தங்களுக்கிடையிலான ஒரு முகமையினை தகுதிவாய்ந்த ஒருங்கிணைக்கும் முகமையாக நியமனம் செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது. காற்றாலை மற்றும் சூரிய சக்தியின் திட்டமிடலுக்கு தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை மாநில மின்சுமை பகுப்பு மையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும். காலத் தொகுதி வாரியான திட்டமிடல், ஒவ்வொரு ஒருங்கிணைந்த துணை மின் நிலையத்திற்குமான உட்செலுத்தப்பட்ட மின்உற்பத்தி மற்றும் விலக்கங்கள் ஆகியவைகளுக்கான பதிவுருக்களையும் மற்றும் கணக்குகளையும் தகுதியான ஒருங்கிணைக்கும் முகமை பர்ாமரிக்கும். உள்ளபடியான மின்உட்செலுத்தலுக்கும் மற்றும் பிந்திய காலத்திற்கான உத்தேச மின்உற்பத்திக்குமிடையேயான (அறிவிக்கப்பட்ட மின்உற்பத்தி) வேறுபாடு விலக்கம் எனக் கருதப்பட்டு அத்தகைய விலக்கத்திற்காக அத்தகைய மின்உற்பத்தியாளர்களிடமிருந்து தண்டத்தொகை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு மின் உற்பத்தியாளர்களிடம் அத்தகைய விலக்கங்களுக்காக தண்டத்தொகை வசூலிக்கப்பட்டு மாநில ஒருங்கிணைந்த விலக்கக்கணக்கில் (விதீஅ) செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தண்டத்தொகைகள் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களின் விலக்கங்களினால் ஏற்படும் தாக்கங்களினால் மின் பகிர்மான உரிமதாரருக்கு செலுத்தப்படும் செலுத்தல்களின் காரணமாக மாநில ஒருங்கிணைந்த விலக்கத் தீர்வு கணக்கில் ஏற்படும் குறைவுத் தொகைகளை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

இந்த ஒழுங்குமுறைவிதிகள் மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு முற்படும்.

(தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சு. சின்னராஜலு**
*செயலாளர்*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்*